செ.வெ.எண்: 202 **நாள்.23.03.2020**

## கொரோனோஸ் வைரஸ் தடுப்பு தொடர்பாக

## தஞ்சாவூர் மாநகராட்சி மற்றும் கும்பகோணம் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் பணிகள்

தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து வந்து தங்கியுள்ள 20 நபர்கள் இம்மாநகராட்சி பொதுசுகாதாரபிரிவு சிறப்பு குழு மூலம் கண்டறியப்பட்டு அவர்களுக்கு சளி, இருமல் மற்றும் காய்ச்சல் உள்ளதா என நேராய்வு செய்யப்பட்டு மற்றும் தொடர்ந்து தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு விசாரித்த வகையில் மேற்படி நபர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை கண்டு அறியப்பட்டது. அன்னார்கள் மாநகராட்சியில் சுகாதார பிரிவால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

மாநகராட்சி நிர்வாகத்தால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ கல்லூரி உட்புறம் மற்றும் திலகர்திடல் ஆகிய இருவேறு உணவகத்தில் இன்று அம்மா உணவகம் வழக்கம் போல் செயல்பட்டு பொதுமக்கள், மருத்துவகல்லூரி மருத்துவமனையில் தங்கியுள்ள உட்புற நோயாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கு காலை 700 பேர்களுக்கு, மதியம் 1050 பேர்களுக்கு இரவு சிறப்பினமாக இரு அம்மா உணவங்களும் செயல்பட்டு 535 பேர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. மேலும் ஆதரவற்றவர்கள் 16 பேர்களுக்கு 3 வேளையும் இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேரூந்து நிலையம், தற்காலிக பேரூந்துநிலையம், புகைவண்டி நிலையம், இருவேறு அம்மா உணவகங்கள், நீதிமன்ற வளாகம், ATM சென்டர்கள், 18 பெட்ரோல் பங்குகள், மாநகராட்சி அலுவலகம், காவல் நிலையங்கள் மற்றும் அனைத்து நகர்புற ஆரம்ப சுகதார நிலையங்கள் ஆகியவை கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு தொடர்ச்சியாக சுகாதாரமாக பாராமரிக்கப்பட்டு வருகிறது.

வாகனத்தில் பொருத்தப்பட்ட அதிநவீன தெளிப்பான் (Power Sprayer) மூலம் கிருமி நாசினிகள் தொடர்ச்சியாக அனைத்து பகுதிகளிலும் அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் கொரானோ நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து துண்டு பிரசுரம் (Notice) அச்சடிக்கப்பட்டு மாநகராட்சி பணியாளர்களை கொண்டு ஒவ்வொரு வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள RMH சாலை, காந்திஜி சாலை, மேம்பாலம், மருத்துவக்கல்லூரி சாலை, புதிய பேருந்து நிலைய சாலை போன்ற முக்கிய சாலைகளில் இயந்திரங்களை கொண்டு (Jet rodder) நாசினி முழுவதுமாக தெளிக்கப்பட்டது. மேலும், மாநகராட்சியால் கொரோனோஸ் வைரஸ் தடுப்பு பணி மற்றும் விழிப்புணர்வு தொடர்பான கட்டுப்பாட்டு அறை சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவக்குழுவை கொண்டு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது.

**<u>கும்பகோணம் நகராட்சி:-</u>**

கும்பகோணம் நகராட்சி பகுதிகளில் கொரானா நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஜெட்ராடிங் வாகனம் மற்றும் டாடா ஏஸ் வாகனம் மூலமாக கிருமிநாசினி பொருட்களான லைசால் 5%, சோடியம் ஹைப்போகுளோரைட் 1% ஆகியவை புறநகர் பேருந்து நிலையம், நகர பேருந்து நிலையம், காய்கறி மார்க்கெட், பெட்ரோல் பங்க், மகாமகம் பெரிய கடைத்தெரு, சாரங்கபாணி கீழவீதி, மடத்து தெரு, காமராஜ்ரோடு, காந்தியடிகள் சாலை உள்ளிட்ட நகரின் முக்கிய பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது.

---

செய்தி வெளியீடு: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.